**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**
**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

# விலைமனு கோரல்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் வாகனங்களை கொள்முதல் செய்தல்**

**ஒப்பந்த இல.: DIE/PRO/02/2025/99**

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு செயற்பாட்டு குத்தகை முறையின் அடிப்படையில் பின்வரும் வாகனங்களை கொள்முதல் செய்வதற்கு தகைமையுள்ள வழங்குனர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| வாகன வகை | எண்ணிக்கை | காலப் பகுதி |
|---|---|---|
| டபிள் கெப் | 02 | 24 மாதங்கள் |
| பயணிகள் வேன் (15 ஆசனங்கள்) | 02 | 24 மாதங்கள் |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

3. இதற்காக மீளளிக்கப்படாத நாளாயிரம் ரூபா. (ரூ.4000.00) கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுஹுறுபாயா”, **5** ஆம் மாடி, **“B”** பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் **2026.01.20** ஆம் திகதி முதல் **2026.02.02** ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

4. இதில் ஆர்வமுள்ள மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேலை நாட்களில் மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை தொலைபேசி இல.: **011 - 2101559** க்கு அழைக்க முடியும். விலைமனு ஆவணங்களை எவ்வித கட்டணமும் இன்றி 2026.01.20 ஆம் திகதி முதல் 2026.02.02 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை திணைக்களத்திற்கு வருகைத் தந்தோ அல்லது இணையத்தளத்தில் (www.immigration.lk) பரீட்சிக்க முடியும்.

5. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் “மூலப் பிரதி” மற்றும் “இணைப்பிரதி” என தனித்தனியாக கடித உறையிலிட்டு அந்த உறைகளை ஒரு உறையிலிட்டு முத்திரையிட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2026.02.02 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமூகமளித்து 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அதற்காக வைக்கப்படுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தாரரின் பெயர் மற்றும் **IFB** இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனு, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து தொன்னூற்றொரு **(91)** நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் சமூகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

தலைவர்
திணைக்கள கொள்முதல் குழு,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
“சுஹுறுபாயா”,
05 ஆம் மாடி,
ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.

6. விலைமனு முன் சந்திப்பொன்று 2026.01.27 ஆம் திகதி 14.00 மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுஹுறுபாயா” 05 ஆம் மாடியிலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் நடைபெறும்.

தலைவர்
திணைக்கள கொள்முதல் குழு,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
“சுஹுறுபாயா”,
05 ஆம் மாடி,
ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.